தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.02.2013 A.M

## மக்களை மகிழ்வித்த மழை!

விழுப்புரத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென அரை மணிநேரம் பலத்த மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பனிப்பொழிவு இருக்க வேண்டிய பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத் தொடக்கத்திலேயே விழுப்புரத்தில் காலை 6 மணிக்கே கோடையை மிஞ்சும் வகையில் வெயில் அடிக்கிறது. பகல் நேரங்களில் கடும் வெயிலால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுவந்தனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே அதிக உக்கிரத்துடன் வெயில் கொளுத்தியது. மாலை 4.30 வரை வெயிலின் தாக்கம் இருந்தது. அதன் பின்னர் லேசான குளிர்ந்த காற்றுடன் தூரல் மழையாக தொடங்கி, அரை மணி நேரத்துக்கு மேலாக பலத்த மழை பெய்தது.

இதனால், திருச்சி, புதுச்சேரி சாலைகளில் மழைநீர் ஆங்காங்கே தேங்கி நின்றது. உஷ்ணம் தணிந்து இதமான காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## கொடைக்கானலில் மிதமான மழை

கொடைக்கானலில் மிதமான மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இங்கு அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை முதலே குளுமையான சூழ்நிலை நிலவியது. பிற்பகலில் மிதமான மழை பெய்தது. இந்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

## விதை உற்பத்தி பயிற்றுநர்களுக்கு மேம்பாட்டு பயிற்சி

போடி அருகே விதை உற்பத்தி பயிற்றுநர்களுக்கான மேம்பாட்டு பயிற்சி தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்றது.

ராசிங்காபுரம் விடியல் தொண்டு நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து விதை உற்பத்தி பயிற்றுநர்களுக்கான மேம்பாட்டு பயிற்சி வகுப்பை விடியல் தொண்டு நிறுவன வளாகத்தில் நடத்தியது. விடியல் செயலாளர் கே.கண்மணி தலைமை வகித்தார். வளர்ச்சி மேலாளர் கே.காசிராஜ் பயிற்சியை ஒருங்கிணைந்து நடத்தினார்.

நிகழ்ச்சியில் வைகை அணை விவசாய வேளாண் ஆராய்ச்சி மைய பேராசிரியை முனைவர் பி.ஆர்.ரெங்கநாயகி, உதவி பேராசிரியை முனைவர் கே.மனோன்மணி ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் விவசாயத்திற்கு முக்கிய பொருளான விதை உற்பத்தி சிறப்பாக இருந்தால்தான் மகசூல் சிறப்பாக பெற முடியும், 3 ஆயிரம் விவசாயிகளுக்கு 200 விவசாய விதை உற்பத்தி பயிற்றுநர்கள் என்ற விகிதத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது, விதை நேர்த்தி, முளைப்புத்திறன் பார்த்தல், விதைக்கும் முறைகள், கலவன்கள் நீக்குதல், விதை உற்பத்திக்கு பதிவு சான்று பெறுதல், நோய் மேலாண்மை, விதை தரம் பிர்த்தல் போன்ற தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். இதில் விதை உற்பத்தி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கு பெற்றனர். விடியல் விதைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கம் நன்றி கூறினார்.

## வாழை விவசாயிகளுக்கு இலைவழி தெளிப்பான் செயல் விளக்கம்

ஆர்.எஸ். மங்கள வட்டாரம், நோக்கன் கோட்டை கிராமத்தில் வாழை விவசாயிகளுக்கு பனானா ஸ்பெஷல் இலைவழி தெளிப்பான் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் வாழை விவசாயிகளுக்கு இந்த நவீன தொழில் நுட்பத்தின் முதல்நிலை செயல் விளக்கமாக நோக்கன் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த 5 விவசாயிகளின் வயல்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இது வாழைக்குப் போதுமான நுண்ணூட்ட சத்துகளை அளிக்கிறது. இதை 5-ம் மாதத்தில் துவங்கி 10-ம் மாதம் வரை மாதம் ஒருமுறை அளிக்க வேண்டும். இச்செயல் விளக்கத்தினை வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் அனுராதா, விவசாயிகளின் வயல்களில் அளித்தார்.

75 கிராம் பனானா ஸ்பெஷல் ஒரு பாக்கட் ஷாம்பு ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் கரைத்து இலையின் அடிப்பாகத்தில் பரவுமாறு தெளிக்க வேண்டும். இதை தெளிப்பதால் தாரின் அளவு, பழங்களின் எண்ணிக்கை, பழத்தின் பருமன் அதிகரித்து வாழையின் மகசூலும் அதிகரிக்கும் என்றார்.

வாழையில் அறுவடை பின்சார் தொழில்நுட்பம் குறித்து உதவி பேராசிரியர் மீனாட்சி பயிற்சியளித்தார்.

## "விலையில்லா வெள்ளாடு வளர்ப்புத் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தக் கூடிய திட்டம்'

தமிழகத்தில் உள்ள விலையில்லா வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தை ஆய்வு செய்த மத்திய கால்நடை பராமரிப்புத் துறை செயலர் கோகுல் சந்திரபதி, இந்தத் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தக் கூடிய திட்டம் என்று பாராட்டினார்.

பல்லடம் ஒன்றியம், சித்தம்பலம் கிராமத்துக்கு உள்பட்ட புள்ளியப்பம்பாளையத்தில் பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டு சிறந்த முறையில் வளர்க்கப்பட்டு வருகிறது. இதனை மத்திய அரசின் கால்நடை பராமரிப்புத் துறைச் செயலர் கோகுல்சந்திரபதி ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார் .

ஆடுகளுக்கு தாது உப்புக்கலவை வழங்கவும் புரத சத்துமிக்க அகத்தி போன்ற தீவன மர நாற்றுகளை நட்டு வளர்க்க வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் சத்துமிக்க இலைகளை ஆடுகளுக்கு வழங்க வேண்டும் என்று பயனாளிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தத் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால், இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்தக் கூடிய திட்டம் என்று பாராட்டினார். மேலும், இறந்த ஆடுகளுக்கான காப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இதைத்தொடர்ந்து க.அய்யம்பாளையம் ஊராட்சியில் தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறைச் செயலர் ககன்தீப் பேடி, இயக்குநர் பழனிசாமி, மாவட்ட ஆட்சியர் கோவிந்தராஜ், பல்லடம் வட்டாட்சியர் விஜயகுமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள் செம்மிபாளையம் திருமூர்த்தி, க.அய்யம்பாளையம் கமலம் வேலுசாமி, சித்தம்பலம் செல்வி ஆகியோர் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 30.24 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 30.24 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,134 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## மரக்கன்று வளர்ப்புப் பயிற்சி

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் அருகேயுள்ள சித்தளி வன விரிவாக்க மையத்தில் தமிழ்நாடு உயிர்ப் பண்மை பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மரக்கன்றுகள் வளர்ப்பு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற விவசாயிகளை சித்தளி, குன்னம், பாடாலூர் ஆகிய பகுதிகளில் உள்ள வனப்பகுதிக்கு அழைத்துச் சென்று மரங்களின் அவசியம்,, நிலங்களில் மரங்கள் நடுதல், மரங்களால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைக குறித்து விளக்கப்பட்டது. தொடர்ந்து நகராஜன், ராஜா, செங்கமுத்து, கண்ணன் ஆகியோரது விவசாய நிலங்களுக்குச் சென்று நவீன தொழில்நுட்பத்துடன் மரம் வளர்ப்பு குறித்த விளக்கமளிக்கப்பட்டது. வன விரிவாக்க அலுவலர் முத்துராஜ், வனச்சரக அலுவலர் ராமசாமி, சமூக சேவை சங்க ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில், மேர்சி ஆகியோர் பயிற்சி அளித்தன

## வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடல்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயபள்ள நெற்குணத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரக சாகுபடி திட்ட விவசாயிகளுடன், வேளாண் விஞ்ஞானிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம், கோவை இந்திய பருத்திக் கழகம் சார்பில் ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் சாகுபடி திட்டம் நெற்குணத்தில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 350 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பருத்தி சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள், பூச்சிக் கட்டுப்பாட்டுக்கு சுற்றுச்சூழல் மாசற்ற பூச்சிக் கொல்லி பயன்பாடு மற்றும் விற்பனை தொடர்பான சந்தேகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் இறுதியாக வேளாண் விஞ்ஞானிகளின் வயல்வெளி ஆய்வு மற்றும் விவசாயிகளுடன் நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் தலைமை வகித்தார். கோவை மத்திய பருத்தி ஆராய்ச்சிக் கழக முதன்மை விஞ்ஞானி முனைவர் பி. நளாயினி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பருத்தித் துறையைச் சேர்ந்த பூச்சியியல் பேராசிரியர் முனைவர் மோகன்,

குன்றக்குடி வேளாண் அறிவியல் மைய உதவிப் பேராசிரியர் (பயிர் பாதுகாப்பு) சி. சங்கர் ஆகியோர்  விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று, திட்டத்தின் மூலம் ஏற்பட்ட நன்மை தீமைகள் குறித்து கேட்டறிந்தனர்.

ரோவர் வேளாண் அறிவியல் மைய வேளாண் விரிவாக்க தொழிநுட்ப வல்லுநர்  இரா. வசந்தகுமார் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திட்ட மேற்பார்வையாளர் சக்திவேல், களப்பணியாளர் சு. செல்வராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## தமிழகத்தில் மழை நீடிக்கும்

தென் கிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திங்கள்கிழமையும் (பிப்.18) மழை தொடரும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடல் பகுதியில் சில நாள்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, தற்போது லட்சத்தீவுகளுக்கும் கர்நாடக கடல் பகுதிக்கும் இடையே நிலை கொண்டுள்ளது.இதன் காரணமாக இன்று ஆந்திரத்தில் கன மழை பெய்தது. கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலும் பரவலாக மழை பெய்தது. தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, காஞ்சிபுரம், வேலூர், விருதுநகர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மழை பெய்தது. மாநிலத்தில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் திருவலங்காடு பகுதியில் 120 மில்லி மீட்டர் மழை பதிவானது.

கடந்த சில நாள்களாக திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பெய்து வருவதால் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அநேக இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது தற்போது வலுவிழந்து வருவதால் தமிழகத்தில் மழை படிப்படியாகக் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கு இப்போது தண்ணீர் இல்லை: ஷெட்டர் திட்டவட்டம்



தற்போதைய நிலையில் தமிழகத்துக்கு காவிரி நீரைத் தர இயலாது என்று கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள சம்பா பயிர்களைக் காப்பாற்ற கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கவேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்திருந்தது.

இதையடுத்து காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி நீரைத் திறந்துவிட வேண்டும் என்று கடந்த 7-ஆம் தேதி கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், அந்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகம் கடந்த செவ்வாய்க்கிழமை மனு தாக்கல் செய்துள்ளது.

நீதிமன்ற உத்தரவை மதித்து உரிய நீரை உடனடியாக கர்நாடகம் திறந்துவிடும் என்று தமிழகம் எதிர்பார்த்தது. ஆனால், கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து விநாடிக்கு இரண்டாயிரம் கன அடி நீரை மட்டுமே கர்நாடகம் திறந்துவிட்டது.

அந்தத் தண்ணீரும் தமிழக எல்லைக்கு வர 5 நாள்கள் ஆனது. 5 நாள்களுக்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமைதான் தமிழக எல்லையை காவிரி நீர் வந்தடைந்தது. இந்த நிலையில் உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியதால் கர்நாடக முதல்வர் உள்பட ஐந்து பேர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது.

ஹுப்ளியில் பேட்டி: இந்த நிலையில் ஹுப்ளியில் செய்தியாளர்களிடம் கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் ஞாயிற்றுக்கிழமை கூறியது: கர்நாடகத்திடம் தண்ணீரே இல்லாதபோது, தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது இயலாத காரியம். இதையும் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம்.

கடந்த 40 ஆண்டுகளாகக் காவிரி விவகாரத்தில் கர்நாடகம் சட்ட ரீதியாகப் போராடி வருகிறது. உச்ச நீதிமன்றத்தில் இதுதொடர்பாக வழக்குரைஞர் பாலி நாரிமன் சிறப்பாக வாதாடி வருகிறார். பல்வேறு வழக்குகளில் வாதாடியுள்ள அவருக்கு அதிக அளவில் அனுபவம் உள்ளது.

அதைக் காவிரி விவகாரத்திலும் பயன்படுத்துவார் என நம்புகிறேன். எனவே, அவரை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை.

இடஒதுக்கீடு பிரச்னையால் உள்ளாட்சித் தேர்தலை முன்பு எதிர்க்க நேரிட்டது.

தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், அதில் பங்கு கொள்வதில் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. எப்போது வேண்டுமானாலும் தேர்தலைச் சந்திக்கத் தயாராகவே உள்ளோம். மாநிலத்தின் வளர்ச்சிக்கு சிறப்பாகப் பணியாற்றியுள்ளோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

எனவே, உள்ளாட்சித் தேர்தலில் பாஜக அதிக இடங்களைக் கைப்பற்றும் என்றார் ஜெகதீஷ் ஷெட்டர்.இன்று பிரதமரைச் சந்திக்கிறது கர்நாடக அனைத்துக் கட்சிக் குழு:

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட முடியாத நிலை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் எடுத்துக்கூற கர்நாடக அனைத்துக் கட்சிக் குழுவினர் பிரதமரை திங்கள்கிழமை சந்திக்கவுள்ளனர்.இதுகுறித்து கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் நிருபர்களிடம் கூறியதாவது: காவிரி விவகாரத்தில் உண்மையான நிலைமையை எடுத்துரைக்கவும், காவிரி நடுவர் மன்ற உத்தரவை அரசிதழில் வெளியிடக் கூடாது என வலியுறுத்தவும் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க எனது தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு திங்கள்கிழமை (பிப்ரவரி 18) தில்லி செல்ல உள்ளது. இந்தக் குழுவில் கர்நாடகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் இடம்பெறுகின்றனர். காவிரியில் தண்ணீர் இல்லாததால் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் அதிக அளவில் பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. காவிரியில் தண்ணீர் இல்லாத போதும், தமிழகத்துக்கு தண்ணீரைத் திறந்து விட்டு வருகிறோம். இதை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம் என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

18.02.2013 A.M

---

## மாவட்டத்தில் பால் உற்பத்தி குறையும் வறட்சியால் கறவை மாடுகளை விற்பதால்

ஆண்டிபட்டி:தீவன தட்டுப்பாடால் வளர்ப்பு மாடுகள் மற்றும் பால் மாடுகளை விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர். வறட்சியால் ஆண்டிபட்டி பகுதியில் பால் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழைக் காலங்களில் விளையும் தானிய, பயறு வகை பயிர்களை அறுவடைக்கு பிறகு விவசாயிகள் கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்தி வந்தனர்.

சில விவசாயிகள் வெளியூர்களில் இருந்து வைக்கோல், சோள தட்டைகளை விலைக்கு வாங்கி வந்து இருப்பில் வைத்து கோடைகாலத்தில் தீவனத்திற்கு பயன்படுத்துவர்.

தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு பொய்த்துப்போனதால் மானாவாரி, இறவை பாசனங்களின் பரப்பு குறைந்து போனது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

செயற்கை தீவனங்கள் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. இயற்கை தீவனங்கள் விளைச்சல் இல்லாததால் இருப்பில் வைக்க முடியவில்லை.

இதனால் கால்நடை வளர்த்து வருபவர்கள் தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. பால்மாடுகள், வளர்ப்பு மாடுகளை பராமரிக்க முடியாமல் குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது: ஒரு மாட்டுக்கு இரண்டு நாட்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் ஒரு தும்பு தீவனம், தற்போது 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. குருணை மூடை ஆயிரம் ரூபாய்க்கும், 50 கிலோ மக்காசோள மாவு ஆயிரத்து 50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

ஒரு மாடு தினமும் 10 லிட்டர் பால் கறந்தாலும் விவசாயிக்கு நட்டமே ஏற்படும் நிலை உள்ளது.இதனால் குறைந்த விலையானாலும், மாடுகளை விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். புதிதாக மாடுகள் வாங்குவதற்கு விவசாயிகள் முன்வருவதில்லை.வறட்சி நீடித்தால் பால் உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படும்,என தெரிவித்தனர்.

## நெல் கொள்முதல் விலை உயர்த்த விவசாயிகள் வலியுறுத்தல்

தேனி:நெல் கொள்முதல் விலையை கிலோ 25 ரூபாய் உயர்த்தினால் மட்டுமே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுபடியாகும்,என விவசாயிகள் சங்கத்தினர் அரசுக்கு வலியுறுத்தியுள்ளனர்.

தேனி மாவட்ட விவசாயிகள் சங்கத்தினர் தமிழக அரசுக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியுள்ளதாவது: விவசாய தொழிலாளர்களுக்கு கூலி இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. உரத்தின் விலை 5 மடங்கும், பூச்சி மருந்துகளின் விலை 3 மடங்கும் உயர்ந்துள்ளது. தண்ணீர் மற்றும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

டீசல், பெட்ரோல் விலை உயர்வால் உழவு, அறுவடை, கதிரடிக்கும் செலவுகள் அதிகரித்துள்ளன. அனைத்து செலவுகளும் மூன்று முதல் ஐந்து மடங்கு அதிகரித்துள்ள நிலையில், அரசு விவசாயிகளிடம் இருந்து கிலோ 13 ரூபாய்க்கு நெல் கொள்முதல் செய்கிறது. வெளி மார்க்கெட்டில், நெல் விலை கிலோவிற்கு 20 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது.இதனால் விவசாயிகள் அரசுக்கு நெல் வழங்காமல், வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர்.

இந்த விலையும் கட்டுபடியாகாமல் விவசாயிகள் நஷ்டமடைகின்றனர். எனவே ஒரு கிலோ நெல்லுக்கு கொள்முதல் ஆதார விலையாக கிலோ 25 ரூபாய் என அரசு நிர்ணயம் செய்ய வேண்டும்.அப்போது தான், நெல் விவசாயிகளுக்கு கட்டுபடியாகும்.

விவசாயத்தை கை விடும் நிலை ஏற்படும். தமிழக அரசு நெல் கொள்முதல் ஆதார விலை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,என தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் சங்க கூட்டம்

ஸ்ரீவைகுண்டம்:ஸ்ரீவைகுண்டம் விவசாய சங்க ஒன்றிய குழுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு தலைவர் பொன்ராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க பாதுகாப்பு போராட்ட குழு தலைவர் கந்தசாமி, ஒன்றிய செயலாளர் கணபதி, துணை தலைவர் ராமலிங்கம், சிவணந்த பெருமாள், மாயாண்டி, சின்னத்துரை மற்றும் பலர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நான்கு கால்களில் வாடிகொண்டிருக்கும் நெல், வாழை பயிர்களை காப்பாற்ற உடனடி தண்ணீர் திறக்க வேண்டும் எனவும், ஸ்ரீவைகுண்டம் அணையை விரைவில் தூர்வாரிடவேண்டும் எனவும், குளங்களின் ஆக்கிரமிப்பை அகற்றி அளவுகளை ஆய்வு செய்ய வேண்டும். மேலும் வல்லநாட்டில்

கட்டும் தடுப்பணையை நிறுத்தவேண்டும் போன்ற கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி நகரை சுற்றியுள்ள பகுதிகளில், நேற்று அதிகாலை கன மழை பெய்ததால், மானாவாரி விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில்தென்மேற்கு பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமான தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து குறைந்து, முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடவில்லை.
இருப்பினும், இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட்டதால், அணை பாசன பகுதி விவசாயிகள் மட்டும் நெல் சாகுபடி செய்தனர். இறவை பாசன விவசாயிகள் கிணற்றில் தண்ணீர் வற்றியதால், பயறு வகை பயிர்களை கூட அவர்கள் சாகுபடி செய்ய முடியவில்லை.மேலும், தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தால், நிலத்தில் புல் பூண்டு முளைக்காமல், கால்நடைகளுக்கு தீவனம் இன்றி விவசாயிகள் கடும் அவதியடைந்து வந்தனர்.இந்நிலையில், தமிழகத்தில் தென் மாவட்டங்களை தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று அதிகாலை, 1.30 மணிக்கு லேசாக பெய்ய தொடங்கிய மழை சற்று வலுத்து அதிகாலை, 3 மணி வரை பெய்தது. இதனால் கிணற்று பாசன, மற்றும் மானாவாரி விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

### சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம்பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம்

கரூர்: தோட்டகலைத்துறை மூலம் சொட்டுநீர் பாசனத்துக்கு வழங்கப்படும் மானியம் பெற, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகினறனர்.கரூர் மாவட்டத்தில் விவசாயமும் முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு நெல், கரும்பு, வாழை, தக்காளி, கத்தரி உட்பட, பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளின் நலனுக்காக தோட்டகலைத்துறை சார்பில், சொட்டுநீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் வழங்கப்படுகிறது. இதில் நுண்ணீர் பாசன வசதி, பயிர் இடைவெளிக்கு ஏற்றவாறு அதிகபட்ச மானியமாக, பயனாளிக்கு, 43 ஆயிரத்து, 816 ரூபாய் வழங்கப்படுகிறது.

இது சிறு விவசாயிகள், ஐந்து ஏக்கர் பரப்பும், குறு விவசாயிகளில், 2.5 ஏக்கர் பரப்பும்

வைத்திருப்பவர்களுக்கு போதுமானதாக இருக்கும். குறைந்த இடைவெளியில் பயிர் செய்யப்படும் காய்கறிகள், பழங்கள் போன்ற பயிர்களுக்கு, ஒரு ஏக்கர் வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும் மற்ற விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க, 75 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது.நடப்பாண்டு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு. 377 ஹெக்டேர், இதர விவசாயிகளுக்கு, 120 ஹெக்டேர் நிலப்பரப்பில் சொட்டுநீர் பாசனத்தை அமைக்க மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சொட்டுநீர் பாசன திட்டம், விவசாயிகள் மத்தியில் அதிக வரவேற்பை பெற்றுவுள்ளது. இதில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 221 ஹெக்டேரும், இதர விவசாயிகளுக்கு, 120 ஹெக்டேர் நிலப்பரப்பில், சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டு உள்ளது.இதுகுறித்து தோட்டகலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:இந்த ஆண்டு இதர விவசாயிகள் இலக்கு அடைந்த நிலையில், சிறு மற்றும் குறு விவசாயிகள், 156 ஹெக்டேர் சொட்டுநீர் பாசனம் அமைக்க இலக்கு மீதமுள்ளது. தற்போது புதிய விண்ணப்பங்கள் வந்துள்ளதால், அடுத்த மாதம் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டு விடும். தற்போது மழை குறைந்து, வறட்சி நிலவி வரும் சூழ்நிலையில், இந்த பாசனம் வசதி, விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## மாடு வளர்ப்போருக்கு இரட்டிப்பு வருமானம்!

காஞ்சிபுரம்:கறவை மாடுகளின் பால் மட்டும் அல்லாது, அவற்றின் சாணம் மற்றும் கோமியத்தை பயன்படுத்தி வருமானத்தை இரட்டிக்கும் வழிகளை, காரைக்காலில் உள்ள ஒரு கோசாலை, விவசாயிகளிடையே
அறிமுகப்படுத்தி வருகிறது. இதன் மூலம், அந்த பகுதியில் கால்நடை வளர்ப்பு அதிகரித்து வருவதாக, அந்த பகுதி மக்கள்
தெரிவிக்கின்றனர்.

தற்போது, கறவை மாடுகளில் பால் வற்றிய பின், அவை பொருளாதார ரீதியாக பயனளிப்பது இல்லை. இதனால், அவற்றிற்கு தீவனம் வைத்து பராமரிப்பது, வளர்ப்
போருக்கு இயலாத ஒன்றாகிவிடுகிறது.

இதுவே, பால் வற்றிய மாடுகள்,
இறைச்சிக்கு விற்கப்படுவதற்கான முக்கிய காரணமாகிவிடுகிறது. இப்படி விற்பதன் மூலம், வளர்ப்போருக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்கிறார்,
காரைக்கால் அருகே கோசாலை நடத்தும்,

கணபதி சுப்பிரமணியம்.

இது குறித்து, அவர்

கூறுகையில், ""பாலை

மட்டுமே பிரதானமாக வைத்து மாடுகளை வளர்த்தால் அதில் பெரும் வருமானம் பார்க்க முடியாது. சாணம், பசுநீர் ஆகியவற்றில் இருந்து பொருட்கள் தயாரித்தால் நல்ல வருமானம் கிடைக்கும். அதை சரியாக செய்தால், பாலில் இருந்து வரும் வருமானத்தைவிடவும் அதிகமாக இருக்கும்," என்றார்.

வழிகாட்டும் கோசாலை

இத்தகய வருமானத்தை ஈட்ட, காரைக்கால் நகராட்சி அருகே இயங்கி வரும் கோசாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு, ஒரு ஏக்கர் பரப்பில், 50 மாடுகள்

பராமரிக்கப் படுகின்றன. கறவை

மாடுகளோடு, பால் வற்றிய மாடுகளும்

பராமரிக்கப்படுகின்றன.

மாடு இல்லாதோர், அவற்றை வளர்க்க ஆசைப்பட்டால், கோசாலை நிர்வாகம் சார்பில், ஒப்பந்த அடிப்படையில், கறவை மாடுகள் தானமாக வழங்கப்படுகிறன. அந்த மாடுகளை பராமரிக்கவும், சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதே போல், பால் வற்றிய மாடுகளை பெற்றுக்கொண்டு, அவற்றிற்கு பதில் கறவை மாடுகளை கோசலை நிர்வாகம் வழங்கி வருகிறது. இதன் மூலம், காரைக்கால் பகுதியில் மாடு வளர்ப்போரின் எண்ணிக்கையும், அவர்களுடைய வருமானமும் கணிசமாக அதிகரித்து உள்ளது.

வைக்கோல் விலை விண்ணை தொடும் இந்த நேரத்தில், இந்த கோசாலையால் பால் வற்றிய மாடுகளை எப்படி பராமரிக்க முடிகிறது என்பது, குறித்து, கணபதி கூறுகையில், ""இங்கு கிடைக்கும் சாணத்தை விபூதியாகவும், மக்கிய எருவாகவும் மாற்றி வருகிறோம். பசுநீரை (கோமியம்) சேகரித்து, பஞ்சகவ்யமாக மாற்றி வருகிறோம். இந்த தொழில்நுட்பத்தை ஆர்வம் உள்ளவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறோம். இதன் மூலம் அவர்கள் கணிசமான வருவாயை ஈட்டி வருகின்றனர்," என்றார்.

பயனடைந்தோர் ஏராளம்

இந்த கோசாலையில் பயிற்சி பெற்று, தற்போது, விபூதி தயாரித்து வருபவர், கண்ணபிரான். அவர் கூறுகையில், ""நான் விபூதி தயாரிப்பில் பகுதி நேரமாக ஈடுபட்டு வருகிறேன். தற்போது, எங்கள் வீட்டில் இரண்டு கறவை மாடுகள், ஒரு காளை மாடு மற்றும் இரண்டு கன்றுகள் உள்ளன.

இவற்றின் மூலம் தினமும் 15 கிலோ வரை சாணம் கிடைக்கிறது. இதை சேகரித்து, விபூதி தயாரிக்கிறேன்," என்றார்.

மேலும், ""இவ்வாறு, செய்வதன் மூலம் மாதத்திற்கு 3,000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. இதுவே முழுநேரமாக

செய்தால் மாதம் 10,000 ரூபாய் வரை வருமானம் ஈட்டலாம்,"

என்றார்.

அதே போல், கோமியம், பஞ்சகவ்யம் ஆகிய மருந்து பொருட்களை தயாரித்து வரும், முத்துலட்சுமி கூறுகையில், ""எனது கணவர் கடந்த 2003ம் ஆண்டு இறந்து விட்டார். கைக்குழந்தையுடன் தவித்த நேரத்தில், கோமியம், பஞ்சகவ்யம் தயாரிக்க கற்றுக் கொண்டேன். இவை விவசாயத்தில் பயன்படுத்தப் படுகிறன. இதன் மூலம் தற்போது கணிசமான வருவாய் கிடைக்கிறது," என்றார்.ஹோம கட்டிகள் தயாரித்து வரும் ராஜேஸ்வரி கூறுகையில், ""எனக்கு கோசாலையில் இருந்து இரண்டு கறவை மாடுகள் வழங்கியுள்ளனர். தினமும் ஆறு லிட்டர் பால் கிடைக்கிறது. அதன் மூலம் 126 ரூபாய் கிடைக்கிறது. மா, அரசன், வேம்பு, தர்ப்பை, வெட்டிவேர், மரிக்கொழுந்து ஆகியவற்றை சாணத்தில் கலந்து ஹோம கட்டிகள் தயாரிக்கின்றேன். இதன் மூலம் தினமும் 60 ரூபாய் கிடைக்கிறது," என்றார்.அதே போல், ""பசுநீர் பிடித்து கொடுப்பதன் மூலம், ஒரு நாளைக்கு 50 ரூபாய் வருவாய் கிடைக்கிறது. ஆக மொத்தம் ஒருநாளைக்கு 236 ரூபாய் வருவாய் கிடைக்கிறது. பால் வற்றிய நேரங்களில் நாள் ஒன்றிற்கு 110 ரூபாய் கிடைக்கிறது.," என்றார்.இவ்வாறு, பாலை மட்டும் நம்பி இந்த பகுதி மக்கள் காலநடை வளர்க்காததால் வருமானம் கணிசமாக அதிகரித்து உள்ளதாக தெரிவிக்கின்றனர். அதே போல், மாடுகளை வளர்ப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பயிற்சி விவரங்களுக்கு

சாணத்தில் வைத்து அட்டைப்பெட்டி, கொசுவர்த்தி, ஊதுவர்த்தி, விபூதி உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பிற்கான இலவச பயிற்சி குறித்து அறிய; வெங்கடராமன் - 94434 95950 என்ற, எண்ணை தொடர்பு

கொள்ளலாம்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கன மழை பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பூண்டி:நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கடந்த இரு தினங்களாக பெய்த மழையால், பூண்டி ஏரிக்கு, நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பூண்டி ஏரிக்கு, கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல், கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது.

தற்போது இங்கிருந்து புழலேரிக்கு, இணைப்பு மற்றும் பேபி கால்வாய் மூலம் திறந்து விடப்பட்டு உள்ளது. இதனால், ஏரியின் நீர்மட்டம் ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வந்தது.

திருவள்ளூர் மாவட்டத்தில், இரு தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக, பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, கிருஷ்ணா நீர் வினாடிக்கு, 139 கனஅடியும், மழைநீர், 620 கனஅடியும் வருகிறது.

ஏரியில் தற்போது, 1,103 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. இங்குள்ள இணைப்பு மற்றும் பேபி கால்வாய் மூலம் வினாடிக்கு, 320 கனஅடி வீதம் புழலேரிக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. தற்போது, ஏரியின் நீர்மட்டம், 26.75 அடி.

## ஆலமர விழுதுகள் வளர்க்க புது முயற்சி

விளக்கணாம்பூடி:பனை மரத்தை பயன்படுத்தி, அரசு பள்ளி வளாகத்தில் உள்ள ஆலமரத்தின் விழுதுகளை வளர்க்கும் புதிய முயற்சியில், அப்பகுதி மக்கள் ஈடுபட்டு உள்ளனர்.

ஆர்.கே.பேட்டை அடுத்து உள்ளது, விளக்கணாம்பூடிபுதூர் கிராமம். இங்கு, 500 விவசாய குடும்பங்கள் உள்ளன. ஊரின் மையப் பகுதியில் திரவுபதி அம்மன் கோவில் உள்ளது.

இதை ஒட்டி துவக்கப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையம் அமைந்துள்ளது. பள்ளி வளாகத்தில், ஆலமரம் வளர்ந்து வருகிறது. இந்த மரத்தின் விழுதுகளில் தொங்கியபடி குழந்தைகள் விளையாடுவதால், விழுதுகள் தரையில் பதியாமல் அதன் வளர்ச்சி பாதிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், ஆலமரத்தின் விழுதுகள், தரையில் பதிவதற்கு ஏதுவாக அதற்கு கீழே பனைமரத்தின் துண்டுகள் நடப்பட்டன. விழுதுகள், பனைமரத்தின் ஊடாக வளர்ந்து தரையில் பதியும் வகையில், விவசாயிகள் இந்த அமைப்பை

ஏற்படுத்தி உள்ளனர்.

இதன் மூலமாக, விழுதுகளில் குழந்தைகள் விளையாடுவது தடுக்கப்படுகிறது. விவசாயிகளின் இந்த புது முயற்சி விழுதுகள் தரையில் பதிய
உதவியாக உள்ளது.

### வெற்றிலை கொடி கட்டுவதற்கு "சம்பு' உலர்த்தும் பணி தீவிரம்

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வெற்றிலை கொடிகளை அகத்தி மரத்துடன் இணைத்து கட்ட பயன்படும்
"சம்பு' வகை கோரை புற்களை உலர்த்தி பதப்படுத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.
கச்சிராயபாளையம் மற்றும் அதனைச்சுற்றி உள்ள வடக்கநந்தல், அம்மாபேட்டை, மாதவச்சேரி ஆகிய பகுதிகளில் வெற்றிலை பயிரிடப்பட்டு வருகிறது. ஆண்டு முழுவதும் வருமானம் தரக்கூடிய பணப்பயிர் என்பதால், தினமும் வெற்றிலை தோட்டத்தை பராமரிக்கவேண்டும்.
திருமணம் உள்ளிட்ட அனைத்து சுப நிகழ்ச்சிகளுக்கும் வெற்றிலை அவசியம் என்பதால், அதன் தேவை அதிகரித்து கொண்டிருக்கிறது. வெற்றிலை தோட்டம் அமைக்கும் பணியும் அதிகரித்து வருகிறது.
தானே புயலில் வெற்றிலை தோட்டங்கள் பாதிக்கப்பட்ட நிலையில், தற்போது புதிய தோட்டம் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.
நன்கு வளர்ந்த வெற்றிலை செடியை மாற்று கொடி அமைத்து கட்டுவதற்கு, ஒரு வகையான சம்பு என்கிற கோரைப்புல் பயன்படுத்தப்படுகிறது. அதற்காக நீர் நிலைகளின் ஓரங்களிலும், சதுப்பு நிலங்களின் சகதிகளிலும் வளரும் கோரை புற்களை பதப்படுத்துகின்றனர். இப்பணி கச்சிராயபாளையம் பகுதியில் தீவிரமாக தற்போது நடந்து வருகிறது.

### விவசாய தொழிலாளர் சங்கம் கையெழுத்து இயக்கம் துவக்கம்

விழுப்புரம்:தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் கையெழுத்து இயக்கத்தை இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் சரவணன் துவக்கி
வைத்தார்.
அரசு நிலங்களில் குடியிருந்து வருவோருக்கு மனைபட்டா வழங்க கோரி மாநிலம் முழுவதும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் ஒரு கோடி பேர் பங்கேற்கும் கையெழுத்து இயக்க பேரணி சென்னையில் வரும் மார்ச் 2ம் தேதி நடக்கிறது.
விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன்பு மாவட்டம் சார்பாக கையெழுத்து இயக்க பேரணியை

இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் சரவணன் துவக்கி வைத்தார். விவசாயிகள் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் கலியமூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர் சுரேஷ், கிளை செயலாளர் முருகேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தக்காளி விலை வீழ்ச்சி: 10 ஆயிரம் கிலோ தேக்கம்

தம்மம்பட்டி: தம்மம்பட்டி பகுதிகளில், தக்காளி விளைச்சல் அதிகரிப்பால், அதன் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், கமிஷன் மண்டிகளுக்கு, விவசாயிகள் கொண்டு வரும் தக்காளிகள், ஏலம் போகாமல் தேங்கியுள்ளது.தம்மம்பட்டி மற்றும் அதை சுற்றியுள்ள செந்தாரப்பட்டி, கொண்டையம்பள்ளி, நாகியம்பட்டி, உலிபரம், வாழக்கோம்பை, முள்ளுக்குறிச்சி, உள்ளிட்ட கிராமங்களில், அதிகளவு தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றை, தினந்தோறும், தம்மம்பட்டியில் உள்ள கமிஷன் மண்டிகளுக்கு, விவசாயிகள் கொண்டு வருகின்றனர்.சில நாட்களுக்கு முன்பு, 15 கிலோ எடை கொண்ட, 50 பெட்டி தக்காளி தினமும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது, விளைச்சல் அதிகரித்து வருவதால், நாள்தோறும், 500 பெட்டிகளுக்கு மேல் விற்பனைக்கு வருகிறது.இதனால், 15 ரூபாய்க்கு விற்ற தக்காளி, தற்போது, இரண்டு ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால், கமிஷன் மண்டிகளில், நாள்தோறும், ஆயிரக்கணக்கான கிலோ தக்காளி தேங்கி வருகிறது.தினமும் விற்பனையாகாத தக்காளி, மண்டிகளில் தேங்கி, அழுகும் நிலையில் உள்ளன. அவற்றை, கால்நடை வளர்ப்பவர்கள் மொத்தமாக, குறைந்த விலைக்கு வாங்கி, தீவனமாக கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், சேலம், திருச்சி மார்க்கெட்களில் தக்காளிக்கு போதிய விலை கிடைக்காததால், தம்மம்பட்டி பகுதியில் உள்ள கமிஷன் மண்டிகளில், பத்தாயிரம் ஆயிரம் கிலோ தக்காளிகள் தேக்கமடைந்துள்ளன.இது, விவசாயிகளிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

### பருத்தி வரத்து அதிகரிப்புரூ.7.11 கோடிக்கு விற்பனை

இடைப்பாடி: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 37 ஆயிரத்து, 302 பருத்தி மூட்டைகள், 7.11 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை, கொங்கணாபுரத்தில் உள்ளது. இங்கு, நடக்கும் ஏலத்தில், அதிக விலை கிடைப்பதால், பருத்தி வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்த பருத்தி ஏலத்தில், 37 ஆயிரத்து, 302 பருத்தி மூட்டைகள் வந்தன.பி.டி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு, 3,830 ரூபாய் முதல், 4,420 ரூபாய் வரையும், டி.சி.எச்., ரக பருத்தி, குவிண்டால் ஒன்றுக்கு, 4,720 ரூபாய் முதல், 5,290 ரூபாய்

வரையும் ஏலம் போனது. மூன்று நாட்களில், ஏழு கோடியே, 11 லட்சத்து, 8,000 ரூபாய்க்கு விற்பனையானது.

### அரிசி விலையேற்றம்: பொரி விலை "கிடுகிடு'

ப.வேலூர்: அரிசி விலை உயர்வு எதிரொலியால், ப.வேலூர் பகுதியில், பொரி விலை, "கிடுகிடு' ஏற்றம் கண்டுள்ளது.ப.வேலூர், சுல்தான்பேட்டையில், பொரி தயாரிப்பு ஆலைகள் உள்ளன. அந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் பொறி, நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி, சேலம், கரூர் ஆகிய மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.கர்நாடக மாநிலத்தில் விளையும் பவானி பொன்னி ரக அரிசி பொரி தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில், அந்த ரக அரிசி, விலை ஏற்றம் கண்டுள்ளது. அதன் காரணமாக, ப.வேலூர் பகுதியில் தயார் செய்யப்படும் பொரியின் விலையும் ஏற்றம் கண்டுள்ளது.அதன்படி, 50 பக்கா கொண்ட ஒரு மூட்டை பொரி, சென்ற வாரம், 350 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. அதே பொரி, தற்போது, 150 ரூபாய் வீதம் ஏற்றம் கண்டு, 500 ரூபாய் என, உற்பத்தியாளர்கள் நியமனம் செய்துள்ளனர்.அரிசி விலையேற்றம் தொடர்ந்து நீடிப்பதால், பொரியின் விலை உயர வாய்ப்புள்ளது என, உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

### ரூ.22 லட்சம் மதிப்பில் மஞ்சள் ஏலம்நாமகிரிப்பேட்டை விவசாயி மகிழ்ச்சி

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ஒரே நாளில், 22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது.

ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உள்ளது. வாரந்தோறும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடத்தப்படும். நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் மஞ்சளை ஏலத்திற்கு கொண்டுவருவர்.

சேலம், ஈரோடு, திருச்சி போன்ற பல்வேறு மாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்வர். கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தில், 416 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.அதில், 65 கிலோ எடை கொண்ட விரலி ரகம் மஞ்சள் மூட்டை அதிகபட்சமாக, 7,599 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 5,911 ரூபாயக்கும் ஏலம் விடப்பட்டது. அதுபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை, 6,069 ரூபாய்க்கும், குறைந்தபட்மாக, 4,499 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது.பனங்காலி மஞ்சள் அதிகபட்சமாக, 14 ஆயிரம் ரூபாயக்கும், குறைந்தபட்சமாக, 13, 889 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. ஒரே நாளில்,

22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

### ரூ.22 லட்சம் மதிப்பில் மஞ்சள் ஏலம்நாமகிரிப்பேட்டை விவசாயி மகிழ்ச்சி

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ஒரே நாளில், 22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது.
ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உள்ளது. வாரந்தோறும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடத்தப்படும். நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் மஞ்சளை ஏலத்திற்கு கொண்டுவருவர்.
சேலம், ஈரோடு, திருச்சி போன்ற பல்வேறு மாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்வர். கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தில், 416 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.அதில், 65 கிலோ எடை கொண்ட விரலி ரகம் மஞ்சள் மூட்டை அதிகபட்சமாக, 7,599 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 5,911 ரூபாயக்கும் ஏலம் விடப்பட்டது. அதுபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை, 6,069 ரூபாய்க்கும், குறைந்தபட்மாக, 4,499 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது.பனங்காலி மஞ்சள் அதிகபட்சமாக, 14 ஆயிரம் ரூபாயக்கும், குறைந்தபட்சமாக, 13, 889 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. ஒரே நாளில், 22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

### அதிக வரத்தால் வெங்காயம் விலை சரிவடைகிறது



புதுடில்லி:இந்திய சந்தைகளில், கரீப் பருவத்தில் விளைந்த வெங்காயத்தின் வரத்து அதிகரித்துஉள்ளதால், அதன் விலை சரிவுஅடையத் துவங்கியுள்ளது. மொத்த விற்பனையில், ஒரு குவிண்டால் வெங்காயம், 1,800 ரூபாயில் இருந்து, 1,000 ரூபாயாக குறைந்துள்ளது.உள்நாட்டில், அதிகளவில் வெங்காயம் உற்பத்தியாகும், மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில், போதிய அளவிற்கு மழைஇல்லாததால், இதன் உற்பத்தி குறைந்துள்ளது.
மதிப்பீடு:கடந்த, 2011-12ம் பருவத்தில் (ஜுலை-ஜுன்), நாட்டின் வெங்காய உற்பத்தி, 1.51

கோடி டன் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நடப்பு 2012-13ம் பருவத்தில், வெங்காயம் சாகுபடி பரப்பளவு, கடந்த பருவத்தை விட, 15-20 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.அதே சமயம், பல பகுதிகளில், காலதாமதமாக வெங்காயம் பயிர் செய்யப்பட்டுள்ளதால், அதன் உற்பத்தி, சென்ற பருவத்தை ஒத்து இருக்கும் என்ற மதிப்பீடும் உள்ளது.

இதனிடையே, கடந்த இரு மாதங்களாக, சந்தையில் வெங்காய வரத்து குறைந்ததால், அதன் விலை, கிடு... கிடு... வென உயர்ந்தது.நாட்டின் பல மாநிலங்களில், கடந்த வார நிலவரப்படி, சில்லரை விற்பனையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 35-40 ரூபாய் வரை அதிகரித்தது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 13-15 ரூபாயாக இருந்தது.இந்நிலையில், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில், காலதாமதமாக பயிர் செய்யப்பட்ட வெங்காயத்தை, அறுவடை செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நாசிக்:இதனால், நாசிக்கில் உள்ள, ஆசியாவின் மிகப் பெரிய சந்தையான லசல்கானில், கடந்த சில நாட்களாக வெங்காய வரத்து அதிகரித்துள்ளது. இங்கு, இரு வாரங்களுக்கு முன்பு, மொத்த விற்பனையில், ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை, 1,800 ரூபாயாக இருந்தது. இது, தற்போது, 1,000 ரூபாயாக குறைந்துள்ளது.

சந்தையில், வெங்காய வரத்து அதிகரிக்கும் என்பதால், அதன் விலை மேலும் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்தியாவின் மொத்த வெங்காய உற்பத்தியில், மகாராஷ்டிராவின் பங்களிப்பு, 40 சதவீதமாக உள்ளது. இதனால், இங்கு உற்பத்தியாகும் வெங்காயம், நாட்டின் பல மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ராஜஸ்தான்:அதுபோன்று, ராஜஸ்தானிலும், வெங்காய வரத்து அதிகரித்துள்ளதால், இங்கிருந்தும், பிற மாநிலங்களுக்கு அதிக அளவில் வெங்காயம் கொண்டு செல்லப்படுகிறது. இதனால், நாடு தழுவிய அளவில், சில்லரை விற்பனையில், ஒரு கிலோ வெங்காயம் விலை, 20 - 25 ரூபாயாக குறைந்துள்ளது. சந்தைகளில் வெங்காய வரத்து அதிகரித்துள்ளதால், இதன் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என, இத்துறை சார்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.கடந்த பருவத்தில் வெங்காய உற்பத்தி அதிகரித்ததால், சென்ற ஆண்டு மே மாதம், அதன் ஏற்றுமதி மீதான தடையை மத்திய அரசு நீக்கியது. வெங்காய ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.மேலும், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மீண்டும் நிர்ணயிக்கவும், மத்திய அரசு மறுத்து விட்டது.

இதனால், வெங்காயம் தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல், சராசரியாக மாதந்தோறும் ஒரு லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.இரண்டாவது இடம்உலகில், வெங்காய உற்பத்தியில், இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. சென்ற, 2011-12ம் நிதியாண்டில், இந்தியா 15 லட்சம் டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்து, 1,714 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.உள்நாட்டில், பெரிய வியாபாரிகள்,

கூட்டணி அமைத்துக் கொண்டு, வெங்காயத்தின் விலையை செயற்கையாக உயர்த்துவதாக, தேசிய வர்த்தக போட்டி கட்டுப்பாட்டு ஆணையம் (சி.சி.ஐ.,) அண்மையில் தெரிவித்துஇருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் தேயிலை உற்பத்தி111 கோடி கிலோவாக குறைந்தது



குன்னூர்:கடந்த, 2012ம் ஆண்டில், நாட்டின், தேயிலை உற்பத்தி, 111 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய, 2011ம் ஆண்டில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை (115 கோடி கிலோ) விட, 11 சதவீதம் குறைவாகும்.ஆக, இடைப்பட்ட காலத்தில், தேயிலை உற்பத்தி, 11 கோடி கிலோ குறைந்துள்ளது. மதிப்பீட்டு காலத்தில், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.

அதேசமயம், தென் மாநிலங்களில், இதன் உற்பத்தி சரிவடைந்துள்ளதாக, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 45.30 லட்சம் கிலோ குறைந்து, 88 கோடி கிலோவை தாண்டிஉள்ளது. இதில், அசாம் மாநிலத்தின் தேயிலை உற்பத்தி, 58.80 லட்சம் கிலோ என்ற அளவில் உள்ளது. மேற்கு வங்கத்தின் தேயிலை உற்பத்தி, 27.16 லட்சம் கிலோ என்ற அளவில் இருந்து, 27.58 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 85 லட்சம் கிலோ குறைந்து, 23.16 கோடி கிலோவாக குறைந்துஉள்ளது. இதில், தமிழகத்தின் தேயிலை உற்பத்தி, 16.58 கோடி கிலோ என்ற அளவில் இருந்து, 16.28 கோடி கிலோவாக குறைந்துள்ளது. கேரளாவின் தேயிலை உற்பத்தி, 6.88 கோடி கிலோ என்ற அளவில் இருந்து, 6.31 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

## விளைச்சல் பாதிப்பால் தானிய விலை உயரும் அபாயம்



சேலம்:தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால், சிறுதானியங்கள், மளிகை பொருட்களின் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதனால், இவற்றை மூலப்பொருட்களாக கொண்டு தயார் செய்யப்படும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.பருவ மழைவடகிழக்கு பருவமழை குறைந்ததால், தமிழகத்தில், நீர் நிலைகள் வற்றியதோடு, கடும் வறட்சி காணப்படுகிறது. இதனால், அரசு, சென்னையைத் தவிர, 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளது.

தமிழக நீர் நிலைகளில் குறைந்த அளவில் இருந்த தண்ணீரும், வெயில் தாக்கம் காரணமாக, வற்றி விட்டதால், நெற்பயிர் மட்டு மின்றி தோட்டக்கலை, மானாவாரி பயிர்களின் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதனால், தமிழகத்தில் விவசாய விளைபொருட்களின் விலை, திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த ஆண்டுடன், ஒப்பிடுகையில், அனைத்து வகையான அரிசி விலையும், கிலோவுக்கு, எட்டு ரூபாய் முதல், 18 ரூபாய் வரை உயர்ந்துள்ளன.அரிசியை தொடர்ந்து, சிறு தானியங்களான கேழ்வரகு, கம்பு, சோளம் மிளகாய் வற்றல், கொத்தமல்லி உள்ளிட்டவற்றின் விலையும், உயர்ந்துள்ளன.

நிலக்கடலை:எண்ணெய் வித்துக்களை பொறுத்தவரை, எள், நிலக்கடலை, சூரியகாந்தி விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதனால், தமிழகத்தின் பெரிய சந்தைகளாக கருதப்படும் விருதுநகர், சென்னை, சேலம் லீ பஜாருக்கு, விற்பனைக்கு வரும் சிறு தானியங்கள், மளிகை பொருட்கள், எண்ணெய் வித்துக்களின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளன.அவற்றின் விலையும், ஏறுமுகத்தில் உள்ளது. இதனால், இவற்றை பயன் படுத்தி தயார் செய்யப்படும் ஊட்டச்சத்து பொருட்கள், மளிகை பொடி வகைகள், எண்ணெய் வகைகளின் விலையும் உயர்ந்துள்ளன.

செவ்வாய்ப்பேட்டை மளிகை வியாபாரி ஒருவர் கூறியதாவது:தமிழகத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, மானாவாரி பயிர்களின் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், அவற்றின் விலை, வழக்கத்துக்கு மாறாக, பிப்ரவரி மாதத்திலேயே உயர்ந்துள்ளது.கர்நாடகா:வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கர்நாடகா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களில் இருந்து பொருட்கள் விற்பனைக்கு வந்தால் மட்டுமே, இவற்றின் விலை கட்டுக்குள் இருக்கும். அம்மாநிலங்கள் கை கொடுக்காத பட்சத்தில், அனைத்து பொருட்களின் விலையும் கடுமையாக உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

18.02.2013 A.M

---

## மணிலா பயிரில் பூச்சி தாக்குதல்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் மணிலா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடுமையாக பனி பெய்வதால் மணிலா சாகுபடியில் இலைகளில் பூச்சி தாக்குதல் ஏற்பட்டு இலைகள் சேதமடைந்து வருகிறது. மேலும் இலைகளின் மேல் பகுதியில் புருடோனியா புழு தாக்குதலால் அதிக அளவு துளைகள் காணப்படுகிறது.

மேலும் கீழ் பகுதியில் கரையான் தாக்குதலாலும் மணிலா சாகுபடி செய்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கபட்டுள்ளனர். ஏற்கனவே நெல் சாகுபடி கைவிட்ட நிலையில் மணிலா சாகுபடியும் கைவிட்டு விடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். இதனால் மணிலா சாகுபடி செய்த விவசாயிகள் பெரும்பாலானோர் பூச்சிகொல்லி மருந்து அடிக்கும் பணியில் மிக தீவிரமாக ஈடுப்பட்டு வருகின்றனர்.

## வயலில் பரண் அமைத்து பயிரை காக்கும் சூழ்நிலை

காட்டுமன்னார்கோவில், :காட்டுமன்னார்கோவில் பகுதியில் தற்போது ஆழ்குழாய் கிணறு மூலம் விவசாயம் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறையால் நெற்பயிர் முற்றிலும் பாதிப்பு அடைந்தது. இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் மாற்று பயிர் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டனர். கால்நடைகளுக்கு வைக்கோல் பற்றாக்குறை காரணமாக மாற்று பயிர் செய்யும் விளை நிலங்களில் இரவு நேரங்களில் சிலர் கால் நடைகளை மேய்த்து வருகின்றனர். இதனால் மாற்று பயிர் செய்யும் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் மணிலா, தர்பூசணி செய்த விளை நிலங்களில் பயிர்கள் அறுவடை தயார் நிலையில் உள்ளது. இவற்றை பாதுகாக்க விவசாயிகள் பரண் அமைத்து காவல் காத்து வருகின்றனர்.

## கடலூர் மாவட்டத்தில் புதிதாக 16 நெல் கொள்முதல் நிலையங்கள்

கடலூர், : கலெக்டர் கிர்லோஷ் குமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
கடலூர் மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் சிதம்பரம் வட்டத்தில் 22ம்,
காட்டுமன்னார்கோயிலில் 29ம், குறிஞ்சிப்பாடியில் 2, கடலூரில் 1, பண்ருட்டியில் 1, விருத்தாசலத்தில் 9, மற்றும் திட்டக்குடியில் 6 என மொத்தம் 70 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது விவசாயிகள் கோரிக்கைகளின் அடிப்படையில் கூடுதலாக 16 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கீழ்வரும் இடங்களில் நாளை முதல் திறக்க
உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி சிதம்பரம் வட்டத்தில் சி.சாத்தப்பாடி, மருதூர், பூவாலை, பரதூர், வளையமாதேவி, அகர ஆலம்பாடி, காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் ரெட்டியூர், தெம்மூர், கீழக்கடம்பூர், செட்டித்தாங்கல், டி.புத்தூர், குறிஞ்சிப்பாடி வட்டத்தில் ஆடூர் அகரம், புதுரெங்கநாதபுரம் மற்றும் விருத்தாசலம் வட்டத்தில் காவனூர், வேப்பூர், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் புதிய நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்க மானியம்

நாமக்கல், : ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்க, மானியம் வழங்கப்படுகிறது.
இது குறித்து மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
மோகனூர் வட்டாரத்தில், மழை குறைவாக பெய்திருப்பதாலும், வறட்சி காலங்களில் குறைந்தளவு தண்ணீரை கொண்டு, கூடுதல் பரப்பில் பயிர் சாகுபடி செய்ய தெளிப்பு நீர்பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.
201-2013ம் ஆண்டுக்கு ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ், தெளிப்பு நீர்பாசனம் அமைக்க, ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு, கி7,500 மானியம் வழங்கப்பட்டு வருகிறது.
இத்திட்டத்தில் பயனடைய விருப்பம் உள்ள ஆதிதிராவிடர் விவசாயிகள் தங்களது நிலத்தின் சிட்டா, அடங்கல், நீர் ஆதாரம் மற்றும் நில வரைபடம் ஆகிய ஆவணங்களுடன் வேளாண்

விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசுந்தேயிலை விலை நிர்ணய குழு பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை

குன்னூர்,:நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலைத்தூள்கள் குன்னூ ரில் உள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்களில் விற்பனை செசய்யப்படுகிறது. காலநிலை மாற்றத்தால் தேயிலை மகசூல் வெகுவாக குறைந்துள்ளது. பெரும்பாலான தேயிலைத்தோட்டங்களில் வறட்சி காரணமாக சிவப்புநிற கம்பளி பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது.

இதனால் கடத்த ஆண்டை விட இந்தஆண்டு முதல் 45 நாட்களில் 20 சதவீத மகசூல் குறைந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் தேயிலை உற்பத்தியும் குறைய துவங்கி உள்ளது. குறைந்த அளவிலான தேயிலைத்தூள் விற்பனைக்குவருவதால் வர்த்தகர்கள் போட்டி போட்டுக் கொண்டு தேயிலையை கொள்முதல் செய்கின்றனர்.

இதனால் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இந்த வாரம் சிறுதேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கு சாதாரண ரகம் கிலோவுக்கு ரூ.19, நடுத்தர ரகம் கிலோவுக்கு ரூ.24, உயர்ரகம் கிலோ ரூ26என விலை வழங்கப்பட்டுள்ளது.தேயிலைவரத்து குறைந்ததால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு வாரங்களுக்கு விலையில் ஏற்றம் இருக்குமென உற்பத்தியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## தேயிலை, மலைகாய்கறிக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம்

கோத்தகிரி, : மலைமாவட்ட சிறுவிவசாயிகள் நலச்சங்க மாவட்ட தலைவர் தும்பூர் போஜன், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவித்ததற்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிப்பது. தேயிலை மற்றும் மலைகாய்கறி விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். வனவிலங்குகளால் சிறுவிவசாயிகள் விளை நிலங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு நியாயமான நஷ்டஈட்டு தொகை வழங்க வேண்டும்.

விளை நிலங்களை சுற்றி, அரசின் முழு மானியத்துடன் சோலார் மின்வேலி அமைத்து தர வேண்டும். ஊருக்குள் வனவிலங்குகள் படையெடுப்பதை தவிர்க்க தண்ணீர், உணவு

ஆகியவற்றை வனப்பகுதியிலேயே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வங்கி கடனை திரும்ப செலுத்த முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். அதனால் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் விவசாய கடனை ரத்து செய்ய வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகள் வளர்க் கும் சில்வர்ஓக் மரங்களை, கர்நாடக மாநிலத்தில் உள்ளது போல் விவசாயிகளே வெட்டி, விற்க அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## அதிக மகசூல் பெற மார்கழி பட்ட நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவதற்கு ஏற்ற தருணம்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மார்கழி பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இடுவதற்கு இதுவே ஏற்ற தருணம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சேதுபாவாசத்திர வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி மற்றும் வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மார்கழி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவதற்கு இதுவே ஏற்ற தருணம். ஒரு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்சம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், எஞ்சிய 200 கிலோவை 40- 45வது நாளில் பூக்கும் தருணத்தில் இட்டு களைகொத்தி பயிரைச்சுற்றி நன்கு மண் அணைக்கவேண்டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இடுவதால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும்.

பூச்சி நோய் தாக்குதலு க்கு எதிர்ப்பு சக்தி கிடைக் கும். ஜிப்சம் இட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தக சத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல பலன் கிடைக்கும். ஜிப்சம் இடுவ தால் விழுதுகள் நன்கு இறங்கி, நிலக்கடலை ஊறி, பொக்கற்ற, நல்ல எடையு டன் கூடிய திரட்சியான பருப்புகள் கிடைப்பதுடன் அதிக மகசூலும் கிடைக்கச்செய்கிறது.

இவ்வாறு அவர் கள் தெரிவித்துள்ளனர்.

## உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு ரூ50 லட்சம் வரை மானியம் தொழில்முனைவோருக்கு அழைப்பு

தஞ்சை, : தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில் மானிய உதவிபெற தொழில் முனைவோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குநர் கலியராஜ் (வேளாண்மை வணிகம்) தெரிவித்துள்ளது: உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு 12வது 5 ஆண்டு திட்டத்தில் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்திற்கு அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்து, இந்தாண்டு முதல் இத்திட்டத்தை மாநில அரசு பங்களிப் புடன் செயல்படுத்தவுள்ளது.

புதிதாக உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்க விரும்புவோர் ஏற்கனவே நடத்திவரும் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துதல், புதிய தொழில்நுட்ப உபகரணங்கள், கருவிகள் வாங்குதல், செய்துகொண்டுள்ள தொழிலை விரிவுபடுத்துதல் போன்ற பிரிவுகளுக்கு அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை 25 சதவீத மானிய உதவி அளிக்கப்படுகிறது.

இப்பிரிவின்கீழ் பால் பொருட்கள், இறைச்சி, மீன், கோழி, தானியங்கள், எண்ணெய் வித்து, அரிசி மில், மாவு மில், பயறுவகை, தென்னை வகை, உணவு நறுமணப்படுத்தல் போன்ற அனைத்து வகையான பொருட்களை பதப்படுத்தி அல்லது மதிப்பூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற இனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இவையில்லாமல் தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களுக்கு குளிரூட்டப்பட்ட வசதிகள் மற்றும் குளிரூட்ட வாகனங்கள் வாங்க 50 சதவீத மானியத்துடன் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மேலும் மனிதவள மேம்பாட்டு திட்டங்கள் மூலம் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் நடுத்துவோருக்கும், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டயம், சான்றிதழ் படிப்புகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும்,தொழில்முனை வோர் பயிற்சி நடத்துவோருக்கும் தேசிய உணவு பதப்பட்டும் இயக்கத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற பலவகையான பிரிவுகளுக்கு மானியம்பெற விரும்புவோர் அதற்கான திட்ட வரைவு தயார் செய்து வங்கி மூலம் கடன் உதவி பெற விண்ணப்பம் செய்ய வேண்டும். மானிய உதவி அனைத்து வங்கிக்கடன் மூலம் இணைக்கப்படுவதால், கடனுதவி அளிக் கும் வங்கியின் ஒப்புதல்பெற வேண்டியது அவசி யம். இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு தஞ்சை வேளாண் அலுவலர் சாருமதி- 92242 03857, பட்டுக்கோட்டை வேளாண் அலுவலர் மாலதி- 94428 89344, கும்பகோணம் வேளாண் அலுவலர் நாக ராஜன்- 94439 66869 ஆகி யோரை தொடர்புகொள்ளலாம். இவ்வாறு வேளாண் துணை இயக்குநர் கலிய ராஜ் தெரிவித்துள்ளார்.

## வேளாண்மை விரிவாக்க மையங்களில் 17 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரங்கள் இருப்பு இணை இயக்குனர் தகவல்

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களில் 17 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து காஞ்சிபுரம் வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2012-2013ம் ஆண்டு சொர்ணாவாரி பருவத்தில் 18.400 ஹெக்டரில் சாகுபடி செய்ய திட்டமிட்டு 15,121 ஹெக்டரில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு சம்பா பருவத்துக்கு 54,816 ஹெக்டரில் சாகுபடியும், 62,904 ஹெக்டரில் திருந்திய நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சிறு தானியத்தில் 801 ஹெக்டரும், பயிர் வகையில் 4368 ஹெக்டரும், எண்ணெய் வித்து பயிர்களில் 14494 ஹெக்டரும், கரும்பு சாகுபடியில் 1449 ஹெக்டரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களில் 81.45 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 9.60 மெட்ரிக் டன் பயிர் விதைகளும், 12.50 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து பயிர் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தற்போது 3079 மெட்ரிக் டன் உரம் தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இருப்பு உள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் 40000 எண் உயிர் உயரங்களும், 17 மெட் ரிக் டன் நுண்ணூட்ட உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பண்ணை திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தேசிய பாதுகாப்பான உணவு தினம் இயற்கை விவசாயத்தை வலியுறுத்தி பாரம்பரிய உணவுப் பொருட்கள் விழிப்புணர்வுக்கு புதிய முயற்சி

சேலம், : சேலத்தில் இயற்கை விவசாயத்தை வலியுறுத்தி பொதுமக்களுக்கு தமிழகத்தின் பாரம்பரிய உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்தியாவில் மரபணு மாற்ற பி.டி கத்திரிக்காய்க்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் கடந்த 2010ம் வருடம் பிப்ரவரி 9ம் தேதி தடை விதித்தது. இந்த நாளை இயற்கை ஆர்வலர்கள் 'தேசிய பாதுகாப்பான உணவு தினம்' என்று கொண்டாடி வருகின்றனர். இந்த வகையில் சேலத்தில் கிரீன் சிட்டி அமைப்பினர் தேசிய பாதுகாப்பான உணவு தினம் கொண்டாடி, பொதுமக்களுக்கு தமிழகத்தின் பாரம்பரிய இயற்கை உணவுகளை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சேலம் டிஎம்எஸ் ஷெட் அருகே நடந்த நிகழ்ச்சியில் கிரீன் சிட்டி தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். ரங்கநாதன் வரவேற்றார். ராமநாதன் முன்னிலை வகித்தார். இயற்கை ஆர்வலர் ஈசன் எழில்விழியன் விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதில் இயற்கை விவசாயத்தை வலியுறுத்தும் வகையில் சாமை அரிசி பிரியாணி, குதிரைவாலி அவல்சாதம்,

கம்மங்கூழ், நெல்லிஜூஸ் போன்றவை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. தொடர்ந்து 'குடும்ப ஆரோக்கியத்தையும், நாட்டுநலனையும் கருத்தில் கொண்டு இயற்கை விளை பொருட்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். எந்த காலத்திலும் மரபணு மாற்ற பயிர்களை ஆதரிக்க கூடாது என்று பசுமை அமைப்பினரும், பொதுமக்களும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

### வேப்பனஹள்ளியில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

வேப்பனஹள்ளி, : நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குதல் குறித்துவேப்பனஹள்ளியில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

மார்கண்டேய நீர்வடி பகுதி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் குறித்து வேப்பனஹள்ளியில் 2 நாள் பயிற்சி முகாம் நேற்று தொடங்கியது. இந்த முகாமில் தற்போதைய கால சூழலுக்கு ஏற்ப தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. வேப்பனஹள்ளி ஒன்றிய குழு தலைவர் முனியப்பன் முகாமை தொடங்கி வைத்தார்.

வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். வேளாண்மை துறை ஆலோசகர்கள் தங்கமணி, பாலராமன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். ஒன்றிய குழு துணைத் தலைவர் ராமமூர்த்தி, துனை வேளாண்மை அலுவலர் நஞ்சன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திரசேகரன், பழனிவேல், நேரு, குமார், சின்னசாமி, வட்டார தொழில்நுட்ப அலுவலர் சண்முகம் ஆகியோர் செய்திருந்தனர்.

### புதுகை மாவட்ட விவசாயிகளுக்கு தானிய ஈட்டு கடன் ரூ.10 கோடி வழங்க திட்டம் கூட்டுறவுத் துறை இணை பதிவாளர் தகவல்

புதுக்கோட்டை, : விவசாயிகளை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து மீட்கவும், விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்யும் வகையில் நடப்பு ஆண்டில் தானிய ஈட்டுக் கடன்களுக்கு ரூ.10 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை இணைபதிவாளர் குமார் பேசினார்.

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 92வது பொதுப்பேரவை கூட்டம் வங்கி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட பொது மேலாளர் மிருனாளினி கலந்துகொ ண்டு பேசினார். முதன்மை வருவாய்

அலுவலர் சந்திரசேகரன், பொதுமேலாளர் தமிழரசன், புதுக்கோட்டை சரக துணைப் பதிவாளர் வாஞ்சிநாதன் மற்றும் கூட்டுறவு வங்கி உதவி பொது மேலாளர்கள், வங்கி யின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் குமார் தலைமை வகித்து பேசுகை யில், புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 2012-13ம் ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.84 கோடி பயிர் கடன் வழங்கி வேளாண் உற்பத்தி அதிகரிக்க உதவியுள்ளது. விவசாயிகளின் மேம்பாட்டிற்காக மத்திய கால கடனாக ரூ.8.50 கோடி வழங்கியுள் ளது. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான சிறு கடன்களாக ரூ.84 லட்சம் வழங்கியுள்ளது.

மகளிர் மேம்பாட்டினை உறுதி நடப்பு ஆண்டில் 1,500 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.15 கோடிக்கு கடன்கள் வழங்கியுள்ளது. கடன் வழங்குதலில் மாவட்டத்திலேயே 2வது இடத்தில் மத்திய கூட்டுறவு வங்கி உள்ளது. விவசாயிகளை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து மீட்கவும், விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்யும் வகையில் நடப்பு ஆண்டில் தானிய ஈட்டுக் கடன்களுக்கு ரூ.10 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2011-12ம் ஆண்டு உறுப்பினர்களுக்கு 5 சதவீதம் பங்கு ஈவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கியின் அனைத்து கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நவீனமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இ பேங்கிங் வசதி ஏற்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நபார்டு உதவியுடன் சிபிஎஸ் திட்டத்தின் கீழ் கூட்டுறவு வங்கிகள் கணினி மயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்கட்டமாக திருமயம், சுப்ரமணியபுரம், கந்தர்வக்கோட்டை ஆகிய 3 கிளைகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு கணக்குகள் ஆன்லைனில் கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளும் விரைவில் ஆன்லை னில் கொண்டுவரப்பட உள்ளது. இப்பணிகள் முடிவடையும் நிலையில் ஏடிஎம் அமைத்திடும் பணி மேற்கொள்ளப்படும், என்றார்.

## நகரி அருகே 40 ஏக்கர் கரும்பு பயிர் தீயில் கருகி நாசம் போலீசார் விசாரணை

ஸ்ரீகளஹஸ்தி,:நகரி அடுத்த நின்றா பகுதியில் 40 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு பயிர்கள் முற்றிலும் தீயில் எரிந்து நாசமாயின. இதுகுறித்து, போலீசார் விசாரித்து வருகின்றனர். சித்தூர் மாவட்டம், நகரி அடுத்த நின்றா பகுதியை சேர்ந்த விவசாயிகள் வடிவேலு ரெட்டி, ரங்கநாத ரெட்டி, ஜலபதி ரெட்டி, ஸ்ரீனிவாசலு ரெட்டி, ரமேஷ் இவர்களுக்கு சொந்தமான விவசாய நிலம் அருகருகே உள்ளது. இதில், 40 ஏக்கர் நிலத்தில் அனைவரும் கரும்பு பயிரிட்டு

இருந்தனர்.

இந்நிலையில், வடிவேல் ரெட்டி நிலத்துக்கு அருகே உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து நேற்றிரவு திடீரென கிளம்பிய தீப்பொறி கரும்பு பயிர் மீது விழுந்தாக கூறப்படுகிறது.

இதில், கரும்பு பயிர்கள் குபு குபுவென பற்றி எரிய தொடங்கியது. இந்த தீ மளமளவென பரவி அடுத்தடுத்து கரும்பு தோட்டங்களில் பற்றியது. அப்பகுதியில் உள்ளவர்கள் தண்ணீரை ஊற்றி தீயை அணைக்க முயன்றும் முடியவில்லை.

இதுகுறித்து, வடிவேல் ரெட்டி நகரி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் அங்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடியும் தீயை அணைக்க முடியவில்லை.

இதில், 40 ஏக்கர் கரும்பு பயிர்கள் முற்றிலும் எரிந்து நாசமானது. இதன் மதிப்பு சுமார் ரூ.40 லட்சம் இருக்கும். இதுகுறித்து, நகரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## மழை இல்லாததால் வாடும் பயிரை கண்டு வருந்தும் விவசாயிகள்

பழநி, : பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. இக்கிராமங்களின் விவசாயம் இப்பகுதியில் உள்ள அணை களை நம்பியும், அணை களில் இருந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களை நம்பியுமே இருந்து வருகிறது. இப்பகுதியில் நடவு காலத்திற்கு பின் மழை பெய்யாத தால் விவசாய நிலங்களின் நீர்ப்பாசனம் அணைகளை நம்பியும், அணைகளில் இரு ந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களையுமே நம்பியிருக்க வேண்டி இருந்தது.

போதிய மழையில்லாததால் அணையின் நீர் இருப்பு வெகுவாக குறைந்து விட்டது. குடிநீருக்கே சிக்கலான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் விவசாயத்திற்கு போதியளவு நீர் திறக்க முடியாத சூழல் நிலவுகிறது. இதனால் அணைகளின் மூலம் நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களும் நீரின்றி வறண்டுள்ளன. பழநி பகுதியில் பாலசமுத்திரம், வையாபுரி கண்மாய் பாசன நிலங்களில் சுமார் 150 ஹெக் டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரின்றி வாடி வருகின்றன. மயிலாடும்பாறை பகுதியில் விவசாயிகள் சாக்கடை நீரை சேமித்து மின்மோட்டார் மூலம் வயலுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இதுகுறித்து பழநி வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, விவசாயிகள் மழையை நம்பி மட்டுமே பயிரிட்டனர். மோட்டார் வைத்திருப்பவர் கிணற்றுப்பாச னம் மூலம் ஓரளவு தப்பித்து கொள்ள வாய்ப்பு உள்ளது. அத்தகைய வசதி இல்லாதவர்கள் கைபம்பு (ஹேண்ட் ஸ்பேரயர்) மூல

ம் தண்ணீரைத் தெளித்தால் கூட அப்பயிர் சுமார் 10 முதல் 15 நாள் வரை தாங் கும். வாட துவங்கியிருக்கும் இப்பயிர்களின் நெல்மணி கள் இனி விதை நெல்லிற்கு உகந்ததாக இருக் காது. உணவிற்கான அரிசி யாக மட்டுமே பயன்தரும். அது வும் முழு அரிசியாக கிடை க்காமல் குருணை யாகவே கிடைக்கும்என்ற னர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கண்மாய்களில் தண்ணீர் இல்லாத தால் மழை பெய்தால் மட்டு மே நெற்பயிர்களை காப் பாற்ற முடியும். அது வும் இன்னும் ஓரிரு நாட் களில் பெய்ய வேண்டும். இல்லையென்றால் நெற்பயிர்கள் கருகிவிடும்என்றனர்.

## பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை

பழநி, : பார்த்தீனிய செடிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பார்த்தீனிய செடி வெப்ப மண்டத்தில் வள ரும் ஒருவித செடியாகும். இச்செடியில் உற்பத்தியா கும் விதை அதிக நாட்கள் உறக்க நிலையில் இருக்கும் பண்புடையது. அளவில் சிறியதாக இருக்கும் இச்செடியின் விதையானது காற்றில் அதிக தூரம் பரவக்கூடியது. ஒரு செடியில் இருந்து ஒரு வருடத்தில் சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் விதைகள் வரை பரவும் தன்மையுடையது. இந்த விதைகள் முதிர்ச்சி அடையாத பருவத்திலும் முளைக்கும் தன்மை உடை யது.

கடுமையான கோடைகாலத்தில் இச்செடி கருகியது போன்ற தோற்றமளிக்கும். ஆனால், மழைக்காலத்தில் செடி நன்கு வளர்ந்திருக்கும். மேலும், ஒரு வருடம் முழுவதும் பூக்கும் தன்மை உடையது. பார்த்தீனிய செடிகளால் மனிதர்கள், கால்நடைகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. சுவாசக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு அதிகமுள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் துறையினர் கூறியதாவது:

பார்த்தீனிய செடிகளை பூப்பதற்கு முன்பே கையினால் பிடுங்கி அழித்து விடலாம். பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள அனை வரும், ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் அழித்தால் அதிகளவில் முழுமையாக கட்டுப்படுத்த முடியும். இந்த செடி மூலம் அதிகளவில் நிலம் பாதிக்கப்பட்டிருந் தால் பயிர் சுழற்சி முறையில் செண்டு மல்லிகை பூச்செடி யை பயிர் செய்வதன் மூலம் இதன் வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம்.

தரிசு நிலங்கள், இருப்பு பாதைகள், சாலையோரங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் அளவில் உப்பை கரைத்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். களைக்கொல்லிகளை உரிய முறையில் பயன்படுத்துவதன்

மூலம் பெருமளவு பார்த்தீனிய செடிகளை குறைக்கலாம். பார்த்தீனிய செடி அதிகளவில் விதைகளை உற்பத்தி செய்யக்கூடியது. எனவே, இச்செடிகளை சேகரித்து ஊட்டமேற்றிய உரமாக மாற்றி பயன்படுத்தலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தூத்துக்குடியில் பிப்.21ல் விவசாய குறைதீர் கூட்டம்

ஏரல், : சாயர்புரம் அருகே சின்னநட்டாத்தி மேற்கு தெருவை சேர்ந்த கட்டிட தொழிலாளி வர்க்கீஸ் ராஜா(35). இவரது மனைவி ஜெயசித்ரா(29). வர்க்கீஸ் ராஜா சரியாக வேலைக்கு செல்லாமல் குடித்து விட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்தார்.

நேற்று முன்தினம் இரவும் குடித்துவிட்டு வந்த வர்க்கீஸ் ராஜாவை ஜெயசித்ரா கண்டித்தார். இதனால் ஆத்திரமடைந்த வர்க்கீஸ் ராஜா கம்பால் மனைவியை தாக்கினார். இதில் படுகாயமடைந்த ஜெயசித்ரா தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதுகுறித்து சாயர்புரம் போலீசில் புகார் செய்யப்பட்டது. சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சூடாம விசாரணை நடத்தி வர்க்கீஸ் ராஜாவை தேடி வருகிறார்.

## தமிழகத்தில் அனைத்துக் கட்சி குழு ஏற்படுத்த விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை...



சென்னை: காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவதற்காக, தமிழகத்தின் சார்பில் அனைத்துக் கட்சி குழு பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழக அரசு இந்த விவகாரத்தில் விவசாய சங்கங்கள் மற்றும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து ஆலோசனை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அனைத்துக் கட்சி குழு பிரதமரை சந்தித்து காவிரி நீரில் தமிழகத்தின் நிரந்திர உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளன.

மேலும் கர்நாடக சட்டசபை தேர்தலை கருத்தில் கொண்டே மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு, நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிட தயங்கி வருவதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர். காவிரி விவகாரத்தில் கர்நாடகா மாநிலத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தது போல், தமிழகத்திலும் அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்தி காவிரி நீரில் தமிழகத்தின் நிரந்திர உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பல்வேறு தரப்புகளும் காவிரி விவகாரத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வரும் நிலையில், தமிழக அரசு தொடர்ந்து இதற்கு மவுனம் காட்டி வருகிறது.

## கர்நாடகாவிலிருந்து வினாடிக்கு 3,700 கனஅடி வரத்து மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்கிறது



பென்னாகரம் : ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ள நிலையில், கர்நாடகம் கூடுதலாக நீர் திறந்து விட்டுள்ளதால் கன்னட அமைப்புகளிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிரை காப்பாற்ற, 12 டிஎம்சி தண்ணீரை திறந்து விடும்படி கர்நாடகா அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கோரியது. இதையடுத்து, கோர்ட் உத்தரவுப்படி நிபுணர் குழுவினர், தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதிகளில் கருகும் நெற்பயிரை பார்வையிட்டு அறிக்கை அளித்தனர்.

நிபுணர் குழு அறிக்கையை ஏற்று, தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விடும்படி கர்நாடகாவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன்படி, கடந்த 9ம் தேதி காலை 11 மணியளவில் கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

அங்கிருந்து 48 மணி நேரத்தில் கர்நாடகா , தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைய வேண்டிய நீர், காவிரி ஆறு வறண்டு கிடந்ததால் 6 நாட்களுக்கு பிறகு மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. இதனால் மேட்டூர் அணை யின் நீர்மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது.

ஆரம்பத்தில் 400 கனஅடியாக இருந்த நீர்வரத்து, பின்னர் படிப்படியாக அதிகரித்தது. நேற்று முன்தினம் வினாடிக்கு 1,614 கனஅடி வீதம் நீர் வந்து கொண்டிருந்த நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர் வரத்து 1,763 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 30.06 அடியாகவும், நீர் இருப்பு 7.54 டிஎம்சியாகவும் உள்ளது.

தமிழகத்துக்கு வரும் காவிரி நீர் அளவிடப்படும் பிலிகுண்டுலுவில் நேற்று முன்தினம் 1,550 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று பிற்பகல் 2 மணி நிலவரப்படி வினாடிக்கு 3,700 கனஅடியாக அதிகரித்தது. ஒரே நாளில் நீர் வரத்து 2,000 கனஅடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத நிலையில், கர்நாடகம் கூடுதலாக நீர் திறந்து விட்டதே நீர்வரத்து அதிகரிப்புக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

தமிழகத்துக்கு நீர் திறக்க உத்தரவிட்டதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகா அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது. கர்நாடகம் மீது தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த மனுக்கள் விரைவில் விசாரணைக்கு வர உள்ளதாக தெரிகிறது. மேலும், காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை வரும் 20ம் தேதிக்குள் அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, அரசிதழில் வெளியிட மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கர்நாடக முதல் வர் ஷெட்டர், இது தொடர்பாக வரும் 19ம் தேதி பிர தமர் மன்மோகன் சிங்கை சந்திக்க உள்ளார். இந்நிலையில், காவிரியில் கூடுதல் நீரை தமிழகத்துக்கு திறந்து விட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

ஏற்கனவே, தமிழகத்துக்கு தண்ணீர் தர கன்னட அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இப்போது கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டதாக கூறப்படுவதால் கன்னட

அமைப்பினரிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், கேஆர்எஸ் அணை பகுதியில் 144 தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

30 அடியை தாண்டியது

நேற்று முன்தினம் விநாடிக்கு 1,614 கனஅடி நீர் வந்த நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து விநாடிக்கு 1,763 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 500 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 30.06 அடியாக இருந்தது. நீர் இருப்பு 7.54 டிஎம்சி. அணையில் கடந்த 12ம் தேதி நீர்மட்டம் 29.48 அடியாக இருந்தது.

## தேயிலை ஏற்றுமதி சரிவு



ஜோர்காட் : நாட்டின் தேயிலை ஏற்றுமதி 2012ம் ஆண்டில் 2.3 கோடி கிலோ அளவுக்கு குறைந்துள்ளது. அசாம் மாநிலம், ஜோர்காட்டில் நடைபெற்ற இந்திய தேயிலை சங்க விழாவில், சங்கத்தின் தலைவர் ஏ.கே.பார்கவா கூறியதாவது: கடந்த 2011ம் ஆண்டில் 14.9 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதியானது. ஆனால், 2012ம் ஆண்டில் இதில் 2.3 கோடி அளவுக்கு ஏற்றுமதி குறைந்தது.

ஐரோப்பிய நாடுகளில் நிலவும் பொருளாதார மந்த நிலையால் ஏற்றுமதி சரிந்துள்ளது. அதே போல், நாட்டின் தேயிலை உற்பத்தியும் குறைந்துள்ளது. வட இந்தியாவில் 75 லட்சம் கிலோ அளவுக்கும், தென்னிந்தியாவில் 1.5 கோடி அளவுக்கு தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. எனினும், அசாம் மாநிலத்தில் உற்பத்தி 40 லட்சம் கிலோ அதிகரித்துள்ளது. இவ்வாறு பார்கவா தெரிவித்தார்.